# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2148/56 - 2019 නොවැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2019.11.08

*2148/56 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 2129/95 மற்றும் 2019.06.28 ஆந் திகதிக்குரித்தான அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் பிழைதிருத்தம் தொடர்பானது**

பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தின் பிரகாரம் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்,இல. 2129/96 மற்றும் 2019.06.28 ஆந் திகதிக்குரித்தான அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 07-4555/11 ஆம் இலக்கத்திற்குரித்தான அறிவித்தலானது இத்தால் திருத்தியமைக்கின்றது.

இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள "குருநாகல் நகர அபிவிருத்தி பிரதேசம்" என்பதற்கு மாறாக "குருநாகலை மாநகர சபை மற்றும் குருநாகலை பிரதேச சபையின் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய குருநாகலை நகர அபிவிருத்தி (பகுதி) என்ற வகையில் அமையுமிடத்து, மேலே குறிப்பிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானியில், கீழே உள்ளவாறு உள்ளடக்கப்பட்டுள்ள குருநாகல் மாநகர சபையின் "நகர அபிவிருத்திப் பகுதிக்காக 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8A ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமானது" என்ற பகுதிக்கு மாறாக "**குருநாகலை மாநகர சபை மற்றும் குருநாகலை பிரதேச சபை பிரதேசங்களை உள்ளடக்கிய குருநாகலை அறிவிக்கப்பட்ட பிரதேசத்திற்காக, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் (திருத்தப்பட்ட) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டத்தின் 8A பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமானது**" என்ற வகையில் அமையுமிடத்து கீழ்வருமாறு திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

**"குருநாகலை மாநகர சபை மற்றும் குருநாகலை பிரதேச சபையின் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய குருநாகலை நகர அபிவிருத்திப் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்."**

குருநாகலை மாநகர சபை மற்றும் குருநாகலை பிரதேச சபையின் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய குருநாகலை நகர அபிவிருத்திப் பகுதிக்காக, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் (திருத்தப்பட்ட)

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தின் 8A ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமானது, பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட திருத்தப்பட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

*கலாநிதி ஜகத் முனசிங்க,*
*தலைவர்,*
*நகர அபிவிருத்தி அதிகாரசபை.*

*2019, நவெம்பர் 07.*

*இல. 2129/96 மற்றும் 2019.06.28 ஆந் திகதிக்குரிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 07-4555/11 ஆம் இலக்கத்திற்கமைவான அறிவித்தலின், மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிழைதிருத்தங்கள் யாவும் 2019, யூன் மாதம் 28 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப் பட்டது.*

*பாட்டலி சம்பிக்க ரணவக்க,*
*பாரிய நகரம் மற்றும்*
*மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர்.*

*பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு,*
*17 மற்றும் 18 ஆம் மாடிகள்,*
*"சுஹூறுபாய",*
*சுபூத்திபுர வீதி,*
*பத்தரமுல்லை,*
*2019, நவெம்பர் 07.*

*11 - 1488*